# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 3 திங்கள் 19.07.2021 மலர் - 2, இதழ் - 103


## விண்வெளி பயிற்சியில் தமிழக மாணவிகள்



விஜயபாரதம்

ஐ.ஏ.ஏ.ஏ. என்ற தனியார் நிறுவனம் சார்பில் 2021ம் ஆண்டுக்கான உலக அளவிலான வானவியல் ஆராய்ச்சிகள் தொடர்பான போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் பங்கேற்று முதல் 10 இடங்களை பிடித்த மாணவ மாணவியர் ரஷ்யாவில் நடக்கும் விண்வெளி பயிற்சிக்கு செல்வர். அதில் அரியலுார் மாவட்டம் திருமானுார் அரசு மேல்நிலைப்பள்ளியின் ப்ளஸ் 1 மாணவிகளான ரகசியா, வேதாஸ்ரீ ஆகியோர் விண்வெளி பயிற்சியில் பங்கேற்க உள்ளனர்.

## அமைச்சர்கள் அறையில் உதயநிதி படம்

அண்ணாதுரையால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் ஒரு குடும்பத்தின் கட்சியாக மாறிவிட்ட தி.மு.கவின் அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும், முதல்வருக்கு அடுத்தபடியாக உதயநிதிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். சில அமைச்சர்கள் தலைமை செயலகத்தில், தங்கள் அறையில் கருணாநிதி, ஸ்டாலின் படத்துடன் சாதாரண சட்டமன்ற உறுப்பினராக மட்டுமே உள்ள உதயநிதியின் படத்தையும் மாட்டி வைத்துள்ளனர் என்பதே அதற்கு சாட்சி. சட்டத்துறை அமைச்சர் ரகுபதியின் அறையில் ஈ.வெ. ராமசாமி, அண்ணாதுரை, கருணாநிதி, ஸ்டாலின் படங்களை தொடர்ந்து உதயநிதி படமும் மாட்டப்பட்டுள்ள புகைப்படம் சமீபத்தில் வெளியானது. இது, அக்கட்சிக்கு எதிராக பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த புகைப்படத்தை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து 'தலைமை செயலகத்தில் அமைச்சர் அலுவலகத்தில் உதயநிதி படம்... தலைமை செயலகமா? அறிவாலயமா?' என கேட்டுள்ளார்.



# மதமாற்றத்தை தடுக்க கிராமசபை தீர்மானம்




விஜயபாரதம்

ஆந்திராவின் கர்னூல் மாவட்டத்தில் உள்ள குருஜாலா கிராம மக்கள், தங்கள் கிராமத்தில் உள்ள பட்டியலின சமூக மக்களை மதமாற்றத்திலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். அங்கு மதமாற்றம் தொடர்ச்சியாக நடப்பதால் அதன் விபரீதத்தை உணர்ந்த அந்த கிராம மக்கள் ஒன்றிணைந்து தங்களின் கிராம சபையில் ஐந்து தீர்மானங்களை சமீபத்தில் நிறைவேற்றியுள்ளனர். அதன்படி, கிராமத்தில் உள்ள ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையை ஆவணப்படுத்துவது. அதனை பொதுப் பதிவில் சேர்ப்பது. பட்டியல் சாதியிலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய நபர்களுக்கு அவர்களின் எஸ்.சி சான்றிதழை மாற்றி, பி.சிசி சான்றிதழ்களை வழங்குமாறு வருவாய்த்துறை அதிகாரிகளிடம் கோரிக்கை வைப்பது. வெளிநாட்டு நிதியுதவி மூலம் கட்டப்பட்ட அங்கீகரிக்கப்படாத தேவாலயத்தை கிறிஸ்தவ அமைப்பான சர்வதேச மிஷன் வாரியத்திலிருந்து (IMB) அகற்றுவது. கிறிஸ்தவ தேவாலயங்கள் மேற்கொண்டுள்ள சட்டவிரோத விரிவாக்கத்தை அகற்றுவது உள்ளிட்ட ஐந்து முன்னோடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனைத் தவிர, இந்த நடைமுறையை பின்பற்ற அருகில் உள்ள கிராமங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டணமில்லா எம்.பில் படிப்பு



விஜயபாரதம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அறிவிப்பில், 'தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், தமிழ் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil.), ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2021 22ம் கல்வியாண்டிற்கான இந்த பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தொடங்க உள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் உயரளவு மதிப்பெண் வரிசையில் தமிழ்நாடு அரசின் இனவாரி சுழற்சி அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். விண்ணப்பங்களை நிறுவன வலைதளத்தளம் www.ulakaththamizh.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அஞ்சல் வழியிலும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய கடைசி நாள் 16.08.2021. கல்விக் கட்டணம் கிடையாது. மாணவ, மாணவியர் இலவசமாக தங்கும் விடுதி வசதியுடன், கட்டணமில்லாமல் எம்.பில். படிக்க விண்ணப்பிக்கலாம். மாணவ, மாணவியர்க்குத் தனித்தனியே கட்டணம் இல்லாத தங்கும் விடுதி வசதி உள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

## தாக்கப்பட்ட வேலையில்லா பட்டதாரிகள்

காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யும் ராஜஸ்தானை சேர்ந்த வேலையில்லாத பல கணினி பட்டதாரிகள், கடந்த சனிக்கிழமையன்று, உத்தரப் பிரதேசம் லக்னோவில் உள்ள காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தியின் அலுவலகத்திற்கு சென்றனர். பிரியங்காவை சந்தித்து வேலை தொடர்பான கோரிக்கையை வைக்க முயற்சித்தனர். பிரியங்காவை சந்திக்க முடியாத்தால் அவர்கள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து, அங்குள்ள காங்கிரஸ் தொண்டர்கள், இந்த பட்டதாரிகளை கடுமையாகத் தாக்கி, விரட்டினர். இதனால், பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



விஜயபாரதம்

## வில்லங்க சுவர் விளம்பரம்

தமிழகத்தில் தற்போது பரபரப்பாக பேசும் பொருளாக மாறியுள்ள தலைப்பு 'கொங்கு நாடு'. இதனை தி.மு.கவினரும் அதன் அதன் கூட்டணி கட்சியினரும் எதிர்க்கின்றனர். ஆனால், கொங்கு மண்டலத்தில் உள்ள கட்சிகள், இந்த கோரிக்கையை தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர். தி.மு.க கூட்டணியில் அங்கம் வகிக்கும் 'கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி' தி.மு.க ஆதரவுடன் சட்டமன்றத் தேர்தலை சந்தித்தது. அக்கட்சியின் பொது செயலாளர் ஈஸ்வரன், தி.மு.கவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்நிலையில், அக்கட்சித் தொண்டர்கள் ஈஸ்வரனுக்கு, 'கொங்குநாட்டு முதல்வரே' என்று பட்டம் சூட்டி கோவை மாவட்டத்தில் சுவர் விளம்பரம் எழுதியுள்ளனர். 'கொங்கு நாடு' என்ற பெயரை கேட்டாலே எரிச்சல் ஆகும் தி.மு.கவிற்கு அக்கூட்டணியில் இருக்கும் கட்சியினரின் இந்த சுவர் விளம்பரம் மேலும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

## கல்வெட்டில் வாமனர் உருவம்



விஜயபாரதம்

சிவகங்கை மாவட்டம் சோழபுரத்தில் உள்ள குண்டாங்கண்மாயில் பழங்காலத்து கல்வெட்டு ஒன்று இருப்பதாக கவியோகி சுத்தானந்த பாரதி பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆறுமுகம் அளித்த தகவலின் பேரில் சிவகங்கை தொல்லியல் குழுவினர் அந்த கல்வெட்டை ஆய்வு செய்தனர். நான்கரை அடி உயரமுள்ள இந்த கல்வெட்டில் 30 வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பத்துக்கும் மேற்பட்ட வரிகள் சிதைந்து உள்ளது. இது 16, 17 ம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் காலக் கல்வெட்டு. இது, 'ஸ்வஸ்தி ஶ்ரீ' எனும் சொல்லோடு தொடங்குகிறது. காத்தம நாயக்கர் என்ற பெயர் உள்ளது. இவர் அரச பிரதிநிதியாக இருந்திருக்கலாம். மதுனா ஆலங்குளம், குண்டேந்தல், குத்திக்குளம், பெருமாளக்குளம், கோரத்தி கண்மாய் போன்ற நீர்நிலைகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. இந்த கல்வெட்டில் இறுதியாக "இதற்குக் கேடு விளைவிப்பவர் கங்கைக் கரையிலே காரம் பசுவைக் கொன்ற தோஷத்தில் போவர்" எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் "இந்த கல்வெட்டில் விஷ்ணுவின் வாமன அவதாரம் பொறிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதனை ஆர்வத்துடன் வந்து பார்த்து செல்கின்றனர்.

# விக்கிபீடியாவை நம்பமுடியாது



விஜயபாரதம்

ஆன்லைன் கலைக்களஞ்சியமான இந்த விக்கிபீடியா செய்திகள் அனைத்தும் உண்மை என பலரால் கண்மூடித்தனமாக நம்பப்படுகிறது. ஆனால், அது தற்போது அப்படி இல்லை, அது திருத்தப்படுகிறது என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் அதன் இணை நிறுவனர் லாரி சாங்கர். இது குறித்து அவர் கூறுகையில், 'விக்கிபீடியாவை இனியும் நம்ப முடியாது, ஏனெனில், இடதுசாரிகள் இந்த டிஜிட்டல் கலைக்களஞ்சியத்தை கையில் எடுத்துக் கொண்டனர். இடதுசாரி ஆதரவாளர்கள், அவர்களின் சித்தாந்தத்திற்கு, நிகழ்ச்சி நிரலுக்கு பொருந்தாது என்று கருதும் தகவல்களைத் திருத்துகிறார்கள். மற்றத் தகவல்கள் அனைத்தும் போலி தகவல்கள் என முத்திரை குத்தப்பட்டு நீக்கப்படும். உதாரணமாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் குறித்த பதிவில், இ டதுசாரி ஆசிரியர்களால், ஜோ பிடன், அவரது குடும்பம் பற்றிய பல தகவல்கள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன. பிடனின் மகன் ஹண்டர் பிடனின் சந்தேகத்திற்கிடமான வணிக நடவடிக்கை தகவல்கள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன' என தெரிவித்தார்.

---

# பாதுகாப்பு தொழில்நுட்ப படிப்பு



விஜயபாரதம்

மகாராஷ்டிர மாநிலம் புனேவில் அமைந்துள்ள பாதுகாப்பு நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே பாதுகாப்பு தொழில்நுட்பம் சார்ந்த பட்ட மேற்படிப்புகள் வழங்கப்படுகின்றன. பாரதத்தில் வேறெங்கும் இந்த தொழில்நுட்ப படிப்புகள் இல்லை. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித் துறை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இந்நிலையில், இத்துறையில் உள்ள வாய்ப்புகளை இளம் தலைமுறையினர் பயன்படுத்திக் கொள்ள வசதியாக, பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் தொடர்பான புதிய எம்.டெக் படிப்புகளை அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கழகத்துடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ) அறிமுகப்படுத்தியுள்ளது. போர் வாகன தொழில்நுட்பம், விமான தொழில்நுட்பம், போர்க்கப்பல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு மற்றும் உணரிகள், அதிசக்தி பொருட்கள் தொழில்நுட்பம், லேசர், மைக்ரோவேவ் சார்ந்த தொழில்நுட்பங்கள் ஆகிய 6 பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் இந்த படிப்புகள் வழங்கப்படுகின்றன. ஐ.ஐ.டி, என்.ஐ.டி, தனியார் பொறியியல் கல்லூரிகள் போன்றவை அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் அனுமதியுடன் வழங்கப்படும் இந்த படிப்புகளை நேரடியாகவோ அல்லது இணைய வழியிலோ வழங்கலாம். இதில் சேரும் மாணவர்கள், தங்களுடைய பட்டமேற்படிப்பு ஆராய்ச்சியை மேற்கொள்ள டி.ஆர்.டி.ஓ ஆய்வகங்களிலும் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களிலும் வாய்ப்புகள் அளிக்கப்படும்.

# ரோமியோ வானூர்திகள்



விஜயபாரதம்

பாரதம், அமெரிக்காவிடம் இருந்து 24 ரோமியோ எம்.ஹெச் 60 வானூர்திகள் வாங்க ஒப்பந்தம் போட்டது. 2.4 பில்லியன் டாலர்கள் செலவில் இந்த வானூர்திகள் வாங்கப்படுகின்றன. இந்த வானூர்திகளை லாக்ஹீட் மார்ட்டீன் நிறுவனம் தயாரிக்கிறது. சமீபத்தில், சான்டியாகோ கடற்படை தளத்தில் நடைபெற்ற விழாவில் முதல் தொகுதியாக, இரண்டு நீர்மூழ்கி எதிர்ப்பு வானூர்திகள் பாரதத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த வானூர்திகள் கடற்படைக்கு மிகப் பெரிய சக்தியை வழங்கும். நீர்மூழ்கி எதிர்ப்பு பணிகளை தவிர பல்வேறு பணிகளில் இந்த வானூர்திகளை பயன்படுத்த முடியும்.

# அயோத்தி ராமரை 2023 ல் தரிசிக்கலாம்



விஜயபாரதம்

ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களுடனான இரண்டு நாள் சந்திப்புக்குப் பின்னர், ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய், வெளியிட்ட அறிவிப்பில், ‘அயோத்தியில் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஸ்ரீராமர் கோயில் பணிகள் திட்டமிட்டபடி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வரும் 2023ம் ஆண்டு இறுதியில் மக்கள் ஸ்ரீராமரை கோயிலுக்குள் சென்று தரிசிக்கலாம். எனினும் முழுமையான கட்டுமானங்கள் வரும் 2025ம் ஆண்டில்தான் முடிவடையும்’ என தெரிவித்தார்.

முன்னதாக, கோயில் கட்டுமானம் மேற்கொள்ள உள்ள இடத்தின் கீழ் நீரோட்டத்தை பொறியாளர்கள் கண்டுபிடித்ததை அடுத்து இந்த ஆண்டு ஜனவரியில் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. தற்போது, கோயிலின் அஸ்திவாரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது செப்டம்பர் 15க்குள் முடிக்கப்பட வாய்ப்புள்ளது.

தீபாவளிக்குப் பிறகு இந்த ஆண்டு நவம்பரில் இரண்டாம் கட்ட பணிகள் தொடங்கப்படும். உத்தர பிரதேசம் மிர்சாபூர் மற்றும் ராஜஸ்தானின் ஜோத்பூரிலிருந்து மணல் கற்கள், ராஜஸ்தானின் மக்ரானாவிலிருந்து பளிங்கு கற்கள், ராஜஸ்தானின் பன்சி பஹார்பூரில் இருந்து இளஞ்சிவப்பு கற்கள் ஆகியவை கோயில் கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.



# மங்கள் பாண்டே

பாரதத்தின் முதல் சுதந்திரப் போர் என்று அறியப்பட்ட 1857 கலகம், பாரத விடுதலைப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தவர் மங்கள் பாண்டே என்ற சிப்பாய். மங்கள் பாண்டே 1827ல் உத்தரப் பிரதேசத்தில், ஒரு சிறிய கிராமத்தில் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்.

1849ல் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில், சிப்பாயாக சேர்ந்தார். மார்ச் 29, 1857இல் என்ன நடந்தது என்று பலவிதமான கருத்துக்கள் உள்ளன. மங்கள் பாண்டே இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கொன்றும், ஒரு கலகத்தை உண்டாக்குமாறு தன்னுடன் இருந்த சிப்பாய்களை கேட்டுக் கொண்டதாகவும், பிடிபட்டபோது தற்கொலைக்கு முயன்றதாகவும் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. பிறகு ஏப்ரல் 18ல் அவரைத் தூக்கிலிடும் தண்டனை வழங்கப்பட்டது. இது போல கலகங்கள் உண்டாகலாம் என்று அஞ்சிய பிரிட்டிஷ் அரசு 10 நாட்களுக்கு முன்பாக அவருடைய தூக்கு தண்டனையை நிறைவேற்றியது. விடுதலைப் போரில் ஈடுபடும் எந்த சிப்பாயையும் 'பாண்டே' என்றே அழைக்கும் அளவுக்கு அவரின் பெயர் பிரிட்டிஷார் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. தன் 29ஆவது வயதில் இந்திய வரலாற்றில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்த ஒரு மிகப்பெரிய கலகத்தை ஆரம்பித்து வைத்துவிட்டு அவர் உயிரிழந்தார்.

இப்போதும்கூட இந்த நிகழ்ச்சிகளை பற்றிய வரலாற்று கட்டுரைகளை படிக்கும்போது, பசு மற்றும் பன்றிக் கொழுப்பு தடவிய தோட்டாக்கள் மட்டுமே அந்தப் புரட்சிக்கு ஒரே காரணம் என்பது போல் சித்தரிக்கப்படுகிறது. ஆனால் இதை மறுக்கும் சாவர்க்கர், தனது 'இந்திய சுதந்திரப் போர்' புத்தகத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபதியத்துக்கு எதிரான புரட்சியில் ஒரு தீப்பொறி தான் அந்த 'வதந்தி' என்றும், சிப்பாய்க் கலகம் அந்தத் தீப்பொறி இல்லையென்றாலும், வேறொன்றைக் காரணமாக வைத்து நடந்திருக்கும் என்று வாதிடுகிறார். இதைக் கருத்தில் கொண்டு மங்கள் பாண்டேவின் செயல்களை பார்ப்பது நலம்.